# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF : SUBORDINATE JUDGE'S COURT, SIVAGANGAI.

Original Suit : **OS** . 559/2019 Plaintiff : PW.2

Deposition of Witness of Defendant: DW

| Name | | திரு.கார்த்திக்கேயன் | District | | |
|---|---|---|---|---|---|
| Father/ Husband name | | திரு. பெருமாள் | Calling | | |
| Village | | | Religion | | |
| Taluk | | | Age | | /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 2573 of the day of 11.11.2025

**<u>முதல் விசாரணை:</u>**

1. **நான்** சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் வருமான வரித்துறை அலுவலகத்தில் MTS அலுவலராக பணிபுரிகிறேன். மேற்படி அலுவலகத்தில் எனக்கு அளித்த அதிகார கடிதத்தின் பெயரில் தாவா வழக்கில் சாட்சி அளிக்கிறேன். எங்களுக்கு கிடைத்த நீதிமன்ற அழைப்பாணையில் 2000 ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரை சிவகங்கை பள்ளி மற்றும் தொடக்கப்பள்ளி ஆகியவற்றின் வருமான வரி கணக்கு பட்டியலில் அசல் மற்றும் அதன் சான்றிதழ் நகல்களை தாக்கல் செய்ய வேண்டி தெரிவிக்கப்பட்டு இருந்தது. மேற்படி காலகட்டத்தில் எந்த ஒரு வருமான வரி கணக்கீடும் ரிட்டனாக தாக்கல் செய்யப்படவில்லை என்பதால் அதற்கான ஆவணங்கள் எதுவும் எங்கள் அலுவலகத்தில் இல்லை குறிப்பிட்ட ஆவணங்கள் எதுவும் அதனால் கொண்டுவர இயலவில்லை என சாட்சியம் அளிக்கிறேன். மேற்படி விவரத்திற்கு எங்கள் அலுவலகத்தில் இருந்து எனக்கு கொடுக்கப்பட்ட கடிதத்தை தாக்கல் செய்கிறேன். மேற்படி ஆவணம் **<u>சா.சா.ஆ.1</u>** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனக்கு அளிக்கப்பட்ட அதிகார கடிதம் **<u>சா.சா.ஆ.2</u>** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
2. சொத்தானது ட்ரஸ்ட் சொத்தாக இருக்கும் பட்சத்தில் அதற்குரிய வருமான வரி கணக்கானது மதுரையில் உள்ள விலக்களிக்கப்பட்ட வருமானவரித்துறை அலுவலகத்தில் செலுத்த

வேண்டும். அதே நிலையில் ரூபாய் பத்து லட்சத்திற்கு மேல் எனில் கோயம்புத்தூரில் உள்ள அலுவலகத்தில் செலுத்த வேண்டும். மேற்படி விவரங்கள் சா.சா.ஆ.1-ல் கண்டுள்ளது.

**<u>1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

1. சாம்பவிகா அறக்கட்டளையின் சார்பாக மதுரையில் உள்ள விலக்கு அளிக்கப்பட்ட வருமான வரித்துறை அலுவலகத்தில் மேற்சொன்ன காலகட்டத்தில் வருமான வரி செலுத்தப்பட்டுள்ளதா என்பது குறித்தும் ரூபாய் பத்து லட்சத்திற்கு மேல் எனில் கோயம்புத்தூரில் வருமான வரி தாக்கல் செய்ய வேண்டும் என்பது குறித்து கோயம்புத்தூர் அலுவலகத்திலும் மேற்சொன்ன காலகட்டத்தில் சம்பவிக்கா அறக்கட்டளையின் சார்பாக வருமான வரி செலுத்தப்பட்டுள்ளதா என்பது குறித்த விவரங்களை நாங்கள் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். வாதிகள் சேகர் மற்றும் ராணி ஆகியோர் வீடுகளில் வருமான வரித்துறை சோதனை மேற்கொள்ளப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி சோதனையில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது குறித்தும் என்னென்ன ஆவணங்கள் கைப்பற்றப்பட்டது என்பது குறித்தும் அதற்காக தண்டம் எதுவும் விதிக்கப்பட்டதா என்பது குறித்தும் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.
2. மேற்படி வருமான வரி சோதனைக்கான ஆவணங்கள் எங்கு உள்ளது என்றால் மேற்படி ஆவணங்கள் டிஜிட்டல் ஸ்டேஷன் செய்யப்பட்டுள்ளது. மேலும் மேற்படி வருமான வரி சோதனையானது எந்த அலுவலகத்தில் இருந்து மேற்கொள்ளப்பட்டது என்றால் நான் தற்போது பணிபுரியும் அலுவலகத்தில் இரண்டு வருடத்திற்கு முன்பு தான் பணியில் சேர்ந்தேன் என்பதால் அந்த விவரம் எனக்கு தெரியாது.

மறுவிசாரணை: இல்லை.

R Pandy
Digitally signed by R Pandy
Date: 2025.11.11 17:41:13 +0530